செய்தி வெளியீடு எண்–270 நாள்–31.5.2009

<u>செய்தி வெளியீடு–31.5.2009</u>

## கள் இறக்குவோர்–கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை

## தமிழக அரசு எச்சரிக்கை!

தமிழகத்தில் ஓரிரு மாவட்டங்களில் சட்டத்திற்குப் புறம்பாகச் சிலர் தொடர்ந்து கள் இறக்கி விற்பனை செய்வதாகவும், அப்படி விற்பனை செய்பவர்களைப் பாதுகாப்பதாகச் சொல்லி ஒருசிலர் அவர்களிடமிருந்து தவறான முறையில் பண வசூல் செய்வதாகவும்; ஒருசிலர் கள் இறக்குபவர்களுக்கு எதிராக கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதாகவும்; தொடர்ந்து அரசுக்குத் தகவல் வந்து கொண்டிருக்கிறது.

பனைத் தொழிலாளர்களின் முக்கிய எதிர்பார்ப்புகளை விரிவாக ஆய்வு செய்து சட்டப்படி ஆவன செய்வதற்கு அரசு தரப்பில் குழு ஒன்று அமைக்கப்படும் என்று நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி அரசின் சார்பில் குழு அமைத்து, அந்தக் குழு ஆய்வு செய்து, அரசுக்கு விரிவான அறிக்கை அளித்து, அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு உரிய முடிவுகளை மேற்கொண்டு அறிவித்திடும் வரை, தென்னை–பனைத் தொழிலாளர்கள் அமைதி காத்திட வேண்டுமென்றும்; சட்டத்திற்குப் புறம்பான எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. சட்டத்தைப் புறக்கணித்துவிட்டு, கள் இறக்குவோர், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்படுகிறது.

*****

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009.